RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2150

OPEN ACCESS

# நல்வழி நவிலும் அறவாழ்க்கை

**பொ. விந்தியகௌரி [அ, *]**

[அ] தமிழ்த்துறை, வே.வ. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்-626001, தமிழ்நாடு, இந்தியா.

# A Virtuous Life in the Good Way

**P. Vinthiya Gowri [a, *]**

[a] Department of Tamil, V.V. Vanniaperumal College for Women, Virudhunagar-626001, Tamil Nadu, India

* Corresponding Author: vinthiyagowri@vvvcollege.org

Received: 13-08-2022
Revised: 30-09-2022
Accepted: 07-10-2022
Published: 15-11-2022

Check for updates

**ABSTRACT**

The lifestyle of Tamil people is unique in literature and as well as in social structure. The characteristics that best distinguish man from animals are the thoughts and energy found in man and the discipline that directs his behaviour to achieve certain goals. Man undergoes both happiness and stress during his adulthood. Thus during this period, he learns many things through his experience. Some people only respect the rich and the people who are poor avoids those who are rich. The great characteristic of human life is to live by giving the wealth that you have to others, not to live for yourself, but to live by helping others by knowing the virtues of the world. True charity is to satisfy the hunger of the poor.

**Keywords:** Social Structure, Human Life, Poor and Rich, Charity

## முன்னுரை

அறக்கருத்துகள் தொடக்க காலத்திலிருந்தே சொல்லப்பட்டுள்ளன. எழுதப்படாமல் பழக்கமாக வந்து குறிப்பிட்ட காலத்தில் அவை நூல் வடிவம் பெற்றுள்ளன. அற நூல்கள் தனித்து உண்டானதற்குக் காரணம் சமூகத் தேவையே. மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுதற்கும் வாழ்க்கையைச் செம்மைப்படுத்தி உயர்த்துவதற்கும் மனிதன் ஆன்மீக விடுதலை பெறுவதற்கும் உதவுவதற்காகவே அற இலக்கியம் படைக்கப்பட்டது. தமிழர் தனிமனிதனையும் சமுதாயத்தையும் போற்றி வளர்க்கும் ஒழுக்க நெறியாக அறத்தைக் கருதினர். வாழ்க்கை நெறி முறைகளையும், நல்லொழுக்க விதிமுறைகளையும் அறிவுறுத்துவதில் முக்கியப் பங்குவகிக்கும் 'நல்வழி' நவிலும் அறவாழ்க்கை குறித்த கருத்தாக்கமே கட்டுரையின் நோக்கம்.

## தமிழ் மொழியும் அறவாழ்வும்

"தமிழ்மொழி மிகவும் தொன்மை வாய்ந்தது. இந்தியாவிலேயே தோன்றிய இலக்கிய மரபுடையது. நவீன இந்தியாவின் பண்பாடு, மரபு ஆகியவற்றிற்கு முதன்மை ஆதாரமாகத் தமிழ்மொழி பயன்பட்டு வருகின்றது" என ஜார்ஜ் எல், ஹார்ட் குறிப்பிட்டுள்ளனர் (Hart III, 2015). ஒரு மொழி செம்மொழியாக இருக்க வேண்டுமென்றால் அது பல மொழிகளின் உருவாக்கத்திற்குத் தாயாக இருந்திருக்க வேண்டும் என்பது செவ்வியல் வரையறைகளில் ஒரு அடிப்படைத் தகுதியாகும். தமிழில் இருந்து பல்வேறு மொழிகள் தோன்றியுள்ளன. சிறந்த மொழி இலக்கியம் காலக் கண்ணாடியாக விளங்க வேண்டும். அதாவது எழுதப்பட்ட காலம் எதுவோ அக்காலத்தின் போக்கை முழுமையாக உணர்த்துவதாக அமைய வேண்டும். அற இலக்கியங்கள் வாயிலாக அன்றைய சமுதாய நிலை, மக்கள்

மனம், பண்பாட்டு உணர்வுகள் எத்தகைய நிலையில் இருந்தன என்பதை உணர முடிகிறது. எனவே தமிழ்மொழி பட்டறிவு வெளிப்பாட்டிற்குச் சிறந்ததாக விளங்குவது புலனாகின்றது. அறம் என்பதற்குப் பல்வேறு விளக்கங்கள் கூறப்படினும் பிறருக்கு இன்னா செய்யாது, தம்மால் இயன்ற அளவு நன்மை செய்வதே அறம். மனத்தூய்மைதான் அறத்திற்கு அடிப்படை.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற" என்கிறார் வள்ளுவப் பெருமான் (Puliyur Kesigan, 2009).

அறம் என்பதற்கு நர்மதாவின் தமிழ் அகராதி "அகம் மற்றும் புற வாழ்க்கை சீராக இயங்கிட ஒருவர் தாம் கடைப்பிடித்திடும் சமயம் சார்பான நெறிமுறைகள்" என்று விளக்கம் தருகிறது.

## உழவின் பெருமை

"மனித இனத்தின் துன்பங்களையும் துயங்களையும் குறைத்து, இன்பங்களை அதிகரிப்பதே மனித இன நலக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவமாகும்"3 என்கிறது வாழ்வியற் களஞ்சியம். எல்லாத் தொழிலையும் உழவுத் தொழில் இயங்க வைக்கிறது. ஏர்த் தொழில் இல்லையென்றால் ஏனைய தொழில் இயங்க முடியாது. உணவுப் பொருள் உற்பத்தி இல்லையென்றால் வேறு தொழில் செய்து மக்கள் வாழ முடியாது. மனித உறுப்புக்களில் தலை எவ்வளவு சிறந்ததோ அதைப் போல் தொழில்களில் உழவுத் தொழில் சிறந்ததாகும். தலையில் தான் அறிவும் அனைத்துவித உறுப்பும் நிறைந்து உடல் இயங்குகிறது. இதனை

"சுழன்றும் ஏர்ப் பின்ன துலகம் அதனால்

உழந்தும் உழவே தலை" என்கிறார் திருவள்ளுவர் (Puliyur Kesigan, 2009).

உழவர் ஒருவரையும் எதிர்பார்த்து வாழ்பவர் அல்லர். சுதந்திரமாகப் பயிர்செய்து அந்தப் பொருளை உண்டு வாழ்பவர். ஏனைய தொழில் செய்பவரெல்லாரும் உணவுப் பொருளுக்கு, உழவுத் தொழில் செய்வோரை எதிர் பார்க்க வேண்டியிருக்கிறது. எந்த நாட்டில் உழவு சிறப்பாக நடந்து உணவுக்கட்டுப்பாடு இல்லையோ, அந்த நாட்டைப் பிறநாடுகள் எல்லாம் உணவின் பொருட்டு எதிர்பார்ப்பது உறுதி.

ஒளிக்காது உழவுத் தொழில் செய்யும் சிறப்பை உடையவர், பிறரிடம் போய்த் தனக்கு ஒன்று வேண்டுமென்று கேட்கமாட்டார். மேலும் கேட்டவர்க்கு இல்லையென்னாது கொடுப்பர்.

உழவரது உதவி முற்றத் துறந்த முனிவருக்கும் தேவையானது. அறம் வளர வேண்டுமென்றால், உழவுத் தொழில் சிறப்புற வளர வேண்டும். ஆற்றின் ஓரத்தில் நிற்கின்ற மரமும், மன்னன் அறியும்படி அம்மன்னனின் அரண்மனையில் உயர்ந்த பதவியில் சிறப்புடனிருந்த உயர்வாழ்வும் எந்தச் சமயத்திலும் அழியக் கூடியன. உயர்வானது என்னவென்றால் சுயமாக உழுது பயிரிட்டு உண்டு வாழ்வதே. பிறரிடம் அடங்கிச் செய்கின்ற வேலைகளுக்கெல்லாம் குறைபாடு உண்டு. ஆனால் உழவுத் தொழிலுக்கு ஒப்பானது வேறொன்றில்லை என்று உழவுத் தொழிலின் உயர்வை ஔவையார் விளக்குகிறார்.

## பசிப்பிணி

மனிதன், மனிதனாக, மாமனிதனாக முழுவளர்ச்சி பெற்று வாழ மனிதநேயம் இன்றியமையாது தேவைப்படுகிறது. மனித இனத்தின் துன்பத்தையும், துயரத்தையும் நீக்கி, இன்பத்தையும், மகிழ்ச்சியையும் மலரச் செய்வது மனிதநேயம். மனிதநேயம் மலர்ந்தால் மனிதர்கள் நலமுடன் வளமுடன் வாழ்வர்.

பசியாவது உணவு வேட்கையாகும். வயிற்றுக்கு உணவு இல்லாமையால் உடலுக்கு நேரிடும் துன்பமே பசி. பசி வறுமையால் ஏற்படுகிறது. மிடி, இலம்பாடு, ஒற்கம் என்ற மூன்று சொற்களும் வறுமை எனப் பொருள்படும். பசி உடலை வருத்தும் தன்மையது. "அழிபசி வருத்தம்" (Naththathanar, 1953)

என்ற சிறுபாணாற்றுப்படைத் தொடர் பசி, அறிவு முதலியவற்றை அழித்துப் பெரிதும் வருத்தும் என்பதைக் குறிப்பிடுகிறது. கடும்பசி நீடிக்குமாயின் உடல்வாடி மெலிவுற்று உயிரும் நீங்கும். ஆகையால் அதை நோய் என்பர். என்றும் பிறர் பசியைத் தீர்க்கும் சீரிய பண்புடையவனைப் புறநானூறு 'பசிப்பிணி மருத்துவன்' எனப் புகழ்கிறது.

வயிற்றில் உண்டாகும் பசி என்னும் கொடுமையைப் போக்குவதற்கு நாழியளவு அரிசியைப் பெறுவதற்காக நாமெல்லாம் பிறரை வணங்கியும், பிறரிடம் சென்று யாசித்தும், தெளிந்த நீரையுடைய சமுத்திரத்தைக் கடந்து சென்றும், பொய்யான பாவனை புரிந்தும் வாழ்கின்றோம்.

"மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை

தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்

கசிவந்த சொல்லியர்மேல் காமுறுதல் பத்தும்

பசிவந் திடப்பறந்து போம்."

என்று ஔவையார் பசிக் கொடுமையை விரித்துரைக்கிறார் (Avvaiyar, 2016).

## அன்னதானம்

அறங்களுள் உணவளித்தலையே சிறந்ததாகச் சான்றோர் கூறினர். பலர் உதவியால் வாழப் பிறந்த மனிதன், பலரோடு இருந்து பங்கிட்டு உண்ண வேண்டும். தனித்துண்ணக் கருதுதல் மிகமிகத் தாழ்மையான செயல்.

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே."

எனச் சீத்தலைச் சாத்தனார் பசி தீர்த்தலின் இன்றியமையாமையினையும் மேன்மையினையும் வற்புறுத்திக் கூறுகிறார் (Chithalai Chathanar, 2010).

ஆற்று நீர் தான் ஓடுகின்ற பாதையில் ஏற்படுத்துகின்ற மேடும் பள்ளமும் மாறி மாறி அமைவது போல் மனிதனிடத்து உண்டாகும் செல்வமும் ஒருகாலத்தில் இல்லாமல் போகும் இன்னொரு காலத்தில் அதிகமாகும். இந்த உண்மையை உணர்ந்து கொண்டு, ஏழைகளுக்கெல்லாம் அன்னமிட வேண்டும், குடிப்பதற்குத் தண்ணீரும் கொடுக்க வேண்டும். இதனால் அறத்தினைச் சார்பாகக் கொண்டு உள்ளத்தின் தன்மை உயர்ந்து விளங்கும் என்று மனிதர்களை அறச் செயல்கள் செய்ய அறிவுறுத்துகிறார்.

ஆற்றில் நீர்ப்பெருக்கு இல்லாமல்போய், உள்ளங்கால் சுடும் அளவுக்கு வெறும் மணற்பரப்பாகிவிட்ட வறட்சிக் காலத்திலும் ஆறானது, தன்னிடத்து ஊற்றுத் தோண்டினால் நீரைப் பெருகச் செய்து உலகத்தவரின் தாகத்தைத் தணிக்கும். அதைப் போல நல்ல செல்வக்குடியில் பிறந்தவர்கள் தரித்திரமடைந்தவர்களாக ஆனாலும் யாசிப்பவர்களுக்குத் தம் மனமொத்து இல்லையென்று கூறமாட்டார்கள். மரம் பழுத்துவிட்டால் வௌவாலை உண்பதற்கு வா என்று கூறி வேண்டி அழைப்பவர்கள் ஒருவரும் அம்மரத்தினிடத்து இல்லை. வௌவால், மரத்தைத் தேடித்தானாக வந்துவிடும். அதைப் போல், கன்றை ஈன்ற பசுவானது அமுதம் போன்ற பாலைச் சொரிந்து தருவது மாதிரி ஒருவர் தம்மிடத்து உள்ள பொருள்களை மறைக்காமல் யாசிப்பவர்களுக்கு ஈவாரேயானால் உலகத்தவரெல்லாம் அவரிடத்துத் தாமாக வந்து சேர்வர் என்று தானத்தின் சிறப்பினை நயம்பட நவில்கிறார்

## தத்துவம்

உண்மையை அறிதல், தன்னை அறிதலே தத்துவம்.

"ஆவாரை யாரே அழிப்பர் அதுவன்றிச்

சாவாரை யாரே தவிர்ப்பர்.” (Avvaiyar, 2016)

இவையெல்லாம் அழகிய பூமியின் மீது மாற்ற முடியாத உண்மைகள். நன்மையான தென்றும், தீமையானதென்றும், நானென்றும் நீயென்றும், இல்லையென்றும் உண்டென்றும் கூறுவதாகிய நிலையில்லாமல் வேண்டுதல் வேண்டாமை யற்ற ஞானநிலையே தானே அதுவாகக் கூடிய தத்துவமாகும். இந்தத் தத்துவத்தை உணராதார் மெய்ப்பொருளை வெளியே தேடுவது சம்பு என்னும் புல்லை அறுத்தவர்கள் அதனைக் கட்டுவதற்கு அப்புல்லே உதவும் என அறியாமல் கயிறு தேடிப்போன விதத்தை ஒக்கும். ஒவ்வொரு மனிதனும் விருப்பு வெறுப்பு அற்ற நிலையில் தானே கடவுள் என்பதை உணர்ந்து கொள்ளலாம். தானே கடவுளாயிருப்பதை உணராது அதை வெளியே தேடுவது அறிவின்மை என்கிறார் ஔவையார்.

துன்பமாகிய பொருளைப் போடுகின்ற பையாக நமக்குப் பொருந்தியுள்ளது உடம்பு. உயிர்விடும் காலத்தில் இப்பூமியிலேயே விட்டு விடுகின்ற பொய்யாகிய இந்த உடலை நிரந்தரமான உண்மை என்று எண்ணக்கூடாது. யாசிப்பவர்களுக்குக் கொடுக்குமளவுக்குப் பொருள் உண்டாகியிருக்குமானால் விரைந்து தானம் செய்யவேண்டும் என்று மனிதன் தானம் செய்து நல்வாழ்வு வாழ வழிகாட்டுகிறார்.

## விதிப்பயன்

விதி என்பது நிச்சயம், உறுதி என்னும் பொருளைத் தரும். மனிதன் கிடைக்காது என உறுதியாகத் தெரிந்துவிட்ட பொருளுக்காக ஏக்கமுற்று வாடாமல் விதியின் பயன் அவ்வளவுதான் என்று அமைதி பெற வேண்டும். இதனை,

“வருந்தி அழைத்தாலும் வாராத வாரா

பொருந்துவன போமின்என்றால் போகா- இருந்து ஏங்கி

நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம்நினைந்து

துஞ்சுவதே மாந்தர் தொழில்” (Avvaiyar, 2016)

என்கிறார் ஔவையார் பெரிய நிலவுலகத்தில் வாழுகின்றவர் மரணமடைந்தவரை நினைத்து ஆண்டுகள் தோறும் துக்கம் தாளாமல் அழுது புரண்டாலும் மரணமடைந்தவர் திரும்பி உயிருடன் வருவதில்லை. அதனால் துன்புற வேண்டாம். இன்று உயிருடனிருக்கும் மனிதனுக்கும் அவ்விதம் மரணமடைவதே கடைசி வழி. இதை உணர்ந்து கொண்டு இவ்வுலகைவிட்டுப் போகும் வரை, நமக்கு உரிமையானதாக என்ன இருக்கிறது? ஒன்றுமில்லை எனச் சிந்தித்து, நம்மிடம் உள்ளதைப் பிறருக்கும் கொடுத்து நாமும் உண்டு வாழ வேண்டும் என்று நல்வாழ்விற்கான வழிமுறைகளைப் பதிவு செய்துள்ளார்.

“ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்(டு) ஒன்றாகும்

அன்றி அதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை

நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்

எனை ஆளும் ஈசன் செயல்.” (Avvaiyar, 2016)

மனிதர் வாழ்க்கையில் எது வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் நடக்கலாம் என்பதைப் பாடல்வழி அறிய முடிகிறது.

## வினைப்பயன்

“செல்வம், கல்வி, நற்பிறப்பு முதலியவற்றைப் பெறுதலும், அவற்றைப் பெறாது இருத்தலும், இன்பமும், துன்பமும், நீடுவாழ்தலும், வாழாமையும் ஆறும் பிறக்கும் முன் கருவில் அமைக்கப்பட்டனவாம். அக்கரு பிறந்தபின் செய்யும் முயற்சி துணைக்காரணமாகும். இம்மைச்

செய்வன மறுமைக்கு வித்தாம். வித்தில் மரமும், மரத்தில் வித்தும் தோன்றுதல்போல வினையும் பிறப்பும் ஒன்றற்கொன்று இயைந்து வளர்ந்து வருகின்றன. முற்செய்வினை இப்பிறப்பில் செய்யும் முயற்சிக்குக் காரணமாகி அதன் பயனைத் தரும்" என்கிறார் கு. சுந்தரமூர்த்தி.

சென்ற பிறவியில் செய்த நல்வினை தீவினைகளே பூவுலகில் பிறவி எடுத்தவர்களுக்குத் துய்ப்பதற்கு என்று சேர்த்து வைக்கப்பட்ட பொருளாகும். எத்தகையவர்களுக்கும் ஒரு செயலை வினைப்பயன் வந்து கூடிய போதில் அல்லாமல், தன் எண்ணப்படி எண்ணி செய்து முடிக்க இயலாது. ஒருவர்க்கு வினைப்பயன்படி, அனுபவிக்க வேண்டியுள்ள சுகத்தினைத் தவிர வேறொருவர் துய்க்கும் சுகங்களைப் பெற விரும்பி முயன்றாலும் அவை கிடைக்காது. பொருளை ஈட்டுவதற்காக ஒருவன் பலவழிகளிலும் எண்ணற்ற முயற்சிகள் செய்தாலும் வினைப்பயன் கூட்டுகின்ற அளவின் படியல்லாமல் அதிகமாகப் பொருள் சேராது. அப்படிச் சேர்ந்த செல்வமும் அவ்வினைப் பயன்படியே நிலைத்திருக்காமலும் போய்விடலாம். அதனால் பொருளாசையை ஒழித்து அற வாழ்வு வாழ வேண்டும் என்கிறார் ஔவையார்.

"செய்தீ வினையிருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்

எய்தவருமோ இருநிதியம் - வையத்(து)

அறம்பாவம் என்னஅறிந்(து) அன்(று) இடார்க்கின்று

வெறும்பானை பொங்குமோமேல்." (Avvaiyar, 2016)

'சிவாயநம' என்னும் திருமந்திரத்தை எப்போதும் தியானித்து வாழ்கின்றவர்களுக்கு எந்த ஒருநாளும் துன்பமில்லை. துன்பத்தை நீக்கக் கூடிய உபாயமாகிய இதுவே விதியை வெல்லக் கூடிய மதியாகும். மற்ற வழிகளில் எல்லாம் விதியின் போக்கின் படியே மதியும் சென்றுவிடும்.

## மாந்தர் வாழ்க்கை

யானையின் மீதுபட்டு அதன் உடலை ஊடுருவிச் செல்லும் அம்பானது. பஞ்சு மூட்டையில் பாய முடியாது. நீண்ட இரும்பாலான கடப்பாரையால் தாக்கும்போது நெகிழ்ந்து கொடுக்காத கருங்கல் பாறை பசுமையான மரத்தின் மென்மையான வேருக்கு நெகிழ்ந்து கொடுத்து அது ஊடுருவிச் செல்ல வழிவகுக்கும். இவற்றைப் போலவே முறையே வலிமையான ஆண்கள் மென்மையான பெண்களிடம் அடங்கிச் செல்வர் கடுஞ்சொற்கள் சாதிக்க முடியாததை மென்மையான இனிய சொற்கள் சாதித்துவிடும்!

மனிதன் வரவுக்கு மேல் செலவு செய்யும்போது கடன் வாங்க வேண்டிய கட்டாயம் உருவாகிறது. கடன் வாங்குவதால் மானம் அழிகிறது. மானம் அழிவதால் உறுதித்தன்மை குலைந்து அறிவு கெடுகிறது. இப்படி இவன் கடன் கேட்பவனாக எவ்விடத்துக்கும் செல்லுவதால் இவனை ஒருதிருடனைப் போலவே அங்குள்ளோர் பார்க்கின்றனர். கடனாளியாகி அதனால் நெறி பிறழ்வதால் தீயவனாக நேரிடுகிறது.

இப்படித்தீமையின் ஒட்டுமொத்த உருவமாக மாறும் இவனை நல்லவர்களும் வெறுக்க ஆரம்பித்து விடுகின்றனர். ஆதலால் வருமானத்துக்கு அதிகமாகச் செலவு செய்யக்கூடாது என்று அறிவுறுத்துகிறார்.

"உண்பது நாழி உடுப்பது நான்குமுழம்

எண்பது கோடிநினைந்(து) எண்ணுவன - கண்புதைந்த

மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் கலம்போலச்

சாந்துணையும் சஞ்சலமே தான்" (Avvaiyar, 2016)

மண்ணினால் செய்யப்பட்ட பாண்டம் எந்த வேளையிலும் உடைந்து விடக் கூடியதாய் உள்ளதைப் போல் மனிதர்களும் எந்த வேளையிலும் துன்பத்திற்குள் தம்மை ஆட்படுத்திக் கொள்ளக் கூடியவர்களாய் உள்ளனர்.

## மனிதர் இயல்பு

ஒருவன் கல்வியறிவு இல்லாதவனாயிருந்தாலும் அவன் கைவசம் செல்வம் ஒன்றுமட்டும் இருந்தால், எல்லா மனிதர்களும் அவன் எங்குச் செல்கிறானோ அவ்விடத்துக்குச் சென்று வரவேற்று முகமன் கூறுவர். பொருள் இல்லாதவனை அவன் மனைவியும் விரும்பமாட்டாள், ஏன் பெற்றெடுத்த தாய்கூட விரும்பமாட்டாள் அவன் வாய்திறந்து சொல்லும் சொல் சிறந்ததாயிருப்பினும் அதற்குச் செல்வாக்கு இருக்காது என்பதிலிருந்து பொருட் செல்வத்தின் அவசியத்தை உணரமுடிகிறது.

பெரியதான இந்த உலகத்தில் ஈன்றெடுத்தவர்கள், உடன்பிறந்தவர்கள், பெருமைக்குரிய தம் நாட்டைச் சேர்ந்தவர்கள், தம் உறவினர்கள், தம்நலம் விரும்பிகள் என்று இவர்களையெல்லாம் விரும்பாத உலோபிகள், இவர்கள் பணிந்து ஒரு பொருளைக் கேட்டாலும் ஈயமாட்டார்கள். ஆனால் அந்நியர்கள் வற்புறுத்திக் காயப்படுத்திக் கேட்டால் அவர்களுக்கு எல்லாப் பொருள்களையும் கொடுப்பர் என்று உலோபிகளின் இயல்பினை எடுத்தியம்புகிறார். இன்றைக்கும் இப்படிப்பட்டவர்கள் உண்டு என்பதை நாம் அறிந்துள்ளோம்.

பூப்பூக்காமலேயே காய்காய்க்கும் மரங்களும் பூமியில் உள்ளன. அவற்றைப் போலவே மனிதர்களுள்ளும் ஒன்றைக் கட்டளையிட்டுச் சொல்லுமுன்பே அதனைக் குறிப்பால் உணர்ந்து செய்து முடிப்பவர்களும் உள்ளனர். சிறப்பாகத் தூவி விதைத்தாலும் நல்ல விளைச்சலைக் கொடுக்காத விதையும் உண்டு. அதைப்போல அறிவில்லாதவனுக்கு எவ்வளவுதான் எடுத்துரைத்தாலும் நல்லுணர்வு தோன்றாது என்று மனிதர் இயல்பினை நயம்படக் கூறுகிறார்.

ஆராய்ந்து சொல்லுமிடத்து, பிச்சையெடுத்து உண்பதை விடக் கீழ்த்தரமாக வாழும் வாழ்க்கையாவது, பிறரிடம் ஆசைவார்த்தை பல கூறி அவர்களை வற்புறுத்திப் பெற்று உண்டு வாழ்வதாகும். *சீச்சீ* இது என்ன கேவலம்? வயிற்றை வளர்ப்பதற்காக இவ்விதம் மானத்தை இழப்பதை விட உயிரை விட்டுவிடுவது மிகமிக நல்லதாகும் என்று ஔவையார் மனிதன் நல்ல பழக்க வழக்கங்களைக் கடைப்பிடித்து மானத்தோடு வாழவேண்டுமென்று வலியுறுத்துகிறார்.

## முடிவுரை

காலந்தோறும் இலக்கியப் படைப்புக்களை உருவாக்கி வரும் இயங்கியல் மொழியாகத் தமிழ் மொழி திகழ்கின்றது. ஒழுக்கத்தை ஒவ்வொருவரும் என்றென்றும் தங்களுக்கு உடைமையாகக் கொள்ள வேண்டும். உழவுத் தொழில் செய்து வாழ்க்கை நடத்துபவர்தான் உண்மையான மேம்பாடு உடையவராவர். சொல்லரும் துன்பங்களைத் தரும் பசிப்பிணியைப் போக்குவோரின் புகழ் சொல்லில் அடங்காது. பொருளுடையவர் அதன் பயனைப் பெற வேண்டுமாயின் பசியால் வாடுவோருக்குப் பொருளை வழங்கி அனைவரும் உண்டு பசி நீங்குமாறு செய்தல் வேண்டும். மனிதன் தன்னோடு மறுமையிலும் தொடர்ந்து வரக்கூடிய துணை ஒன்றைப் பெற வேண்டுமானால் அறச் செயல்களை மனமகிழ்வோடு செய்ய வேண்டும். ஒவ்வொரு மனிதனும் விதிப்பயனை உணர்ந்து வாழ்ந்தால் வாழ்வில் அமைதி, நிம்மதி கிட்டும். நல்வினை ஆக்கத்தைக் கொடுக்கும், தீவினை அழிவைத்தரும். ஆதலால் தீய காரியங்களை விடுத்து நற்செயல்களைச் செய்ய வேண்டும் என்று வாழ்க்கையில் வருந்தாது சுலபமாக வாழும் வழிகளை ஔவையார் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

## References

Avvaiyar, (2016) Nalvazhi, Kotravai Veliyeedu, Chennai, India.

Chithalai Chathanar, (2010) Manimekali, Uma Pathippagam, Chennai, India.

 DOI: 10.34256/irjt224s2150

Hart III, G. L. (2015) Poets of the Tamil anthologies: Ancient poems of love and war, (Vol. 111), Princeton University Press, New Jersey, United States.

Naththathanar, (1953) Sirupanatrupadai, Saiva Siddhanta Works Publishing Society, Chennai, India.

Puliyur Kesigan, (2009) Thirukkural, Paari Nilayam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License